ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2353/32 – 2023 ඔක්තෝබර් මස 10 වැනි අඟහරුවාදා – 2023.10.10
2353/32 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வடக்கு மாகாணம், மன்னார் மாவட்டம், மன்னார் நகரம் பிரதேச செயலாளர் பிரிவில் இல. MN/60, ஓலைத்தொடுவாய் கிராம அலுவலர் பிரிவில் ஓலைத்தொடுவாய் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2023.03.10 ஆந் திகதிய MN/MNN/2022/326 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தையுடைய காணித் துண்டின் எல்லைகள் :

*01.* **துண்டு 'A' - ஓலைத்தொடுவாய்காணி - விஸ்தீரணம் : 0.8403 ஹெக்டயார்.**

வடக்கு: (சேலன் பிஸ்னஸ் (தனியார்) கம்பனியினால் உரிமை கோரப்படும்) ஓலைத்தொடுவாய் காணி ; கிழக்கு: (சேலன் பிஸ்னஸ் (தனியார்) கம்பனியினால் உரிமை கோரப்படும்) ஓலைத்தொடுவாய் காணி; தெற்கு: (சேலன் பிஸ்னஸ் (தனியார்) கம்பனியினால் உரிமை கோரப்படும்) ஓலைத்தொடுவாய் காணி மற்றும் ஆ. வ. மன் 812 இல் துண்டு இல. 1 ; மேற்கு: ஆ. வ. மன் 812 இல் துண்டு இல. 1 மற்றும் (சேலன் பிஸ்னஸ் (தனியார்) கம்பனியினால் உரிமை கோரப்படும்) ஓலைத்தொடுவாய் காணி.

ஹரின் பெர்னாண்டோ
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. 4-3/ 11/ 2022/ CEB/ 153
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு
"மிஹிகத்த மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/06, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2023, ஓகத்து 31.

EOG 10 - 0125


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.